SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

# பாலியல் தாக்குதல் சம்பவங்களைப் புகார்செய்தல்

## *புலனாய்வு மற்றும் நீதிமன்ற நடைமுறைகள்*

## ஆதரவுச் சேவைகள்

நீங்களோ உங்கள் அன்பிற்கு உரியவரோ பாலியல் தாக்குதலுக்கு ஆளானால், பின்வரும் சேவைகள் உங்களுக்கு ஆதரவையும் ஆலோசனையையும் வழங்கும்:

### அபய ஆலோசனை மன்றம் (SOS)

தொலைபேசி: 1800 221 4444 (24 மணிநேரம்)
மின்னஞ்சல்வழி உதவிக்கரம் : pat@sos.org.sg

*நெருக்கடியில் இருப்பவர்களுக்கும், தற்கொலையைப் பற்றி நினைக்கின்ற அல்லது தற்கொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இரகசியமாக உணர்வுரீதியான ஆதரவை வழங்குகிறது*

### சாட்சி ஆதரவுத் திட்டம்

தொலைபேசி: 1800-JUSTICE (1800 587 8423)
(திங்கள் முதல் வியாழன் வரை: காலை 8.30 – மாலை 6.00; வெள்ளி: காலை 8.30 – மாலை 5.30)

மின்னஞ்சல்: STATECOURTS_CENTRE_FOR_SPECIALIST_SERVICES@statecourts.gov.sg

*குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்ற வழக்குகளில் சாட்சியமளிக்கும் பாதிக்கப்பட்ட சாட்சிகளுக்கு ஆதரவு வழங்குகிறது*

இந்த துண்டுப் பிரசுரம் சிங்கப்பூர் காவற்படை மற்றும் சட்ட அமைச்சு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்பட்டது

## பாலியல் தாக்குதல் என்பது என்ன?

கீழ்காணும் குற்றங்கள் பாலியல் தாக்குதலில் அடங்கும்:

கற்பழிப்பு

பாலியல் ஊடுருவல்வழி பாலியல் தாக்குதல்

இளவயதினருடன் பாலியல் ஊடுருவல்

பாலியல் நடவடிக்கைகளுக்காக இளவயதினரை தயார்படுத்துதல்

சிறுவர் அல்லது இளையரை பாலியல்ரீதியாக துன்புறுத்துதல் மற்றும் பயன்படுத்திக்கொள்ளல்

மனநலம் குன்றியவருடன் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

மானபங்கம்

**பாலியல் தாக்குதல் ஒரு கொடுமையான குற்றமாகும். பாலியல் தாக்குதல் தொடர்பான எல்லா புகார்களையும் போலிஸ் கடுமையானதாகக் கருதுகின்றனர்.**

நீங்கள் பாலியல் தாக்குதலால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் அல்லது பாதிக்கப்பட்ட யாரையாவது உங்களுக்குத் தெரிந்திருந்தால், அதனை போலிசிடம் தெரிவியுங்கள். சம்பவம் எப்போது நிகழ்ந்திருந்தாலும் நீங்கள் புகார் அளிக்கலாம். போலிசுக்கு நீங்கள் அளிக்கும் தகவல் ஒரு குற்றவாளியை நீதிக்குமுன் நிறுத்தும்; மற்றவர்களுக்கு மேலும் தீங்கு விளைவிப்பதைத் தடுக்கும்.

**போலிஸ் உதவி உடனடியாக தேவைப்பட்டால் 999 எண்ணில் அழையுங்கள், அல்லது அருகாமையிலுள்ள அக்கம்பக்க போலிஸ் மையத்திற்கு சென்று ஒரு போலிஸ் அதிகாரியிடம் பேசுங்கள். உங்கள் அடையாளம் பாதுகாக்கப்படும்.**

## தாக்குதல் பற்றி போலிஸ் அதிகாரியிடம் நான் பேசியப் பிறகு என்ன நடக்கும்?

**விசாரணையின்போது**

பாலியல் தாக்குதல், மனஅதிர்ச்சியை உண்டாக்கலாம், குழப்பமான மனநிலைக்குக் கொண்டுச் செல்லலாம். அதுவும், குற்றவாளி உங்களுக்குத் தெரிந்தவனாக இருந்தால், இன்னும் அதிக வேதனை உண்டாகும். சிங்கப்பூர் காவற்படை அதன் விசாரணை நடைமுறையில் பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொண்டுள்ள அணுகுமுறையைக் கையாளுகிறது.

**1.** பாதிக்கப்பட்டவரைபராமரிப்பதில் பயிற்சி பெற்ற அதிகாரி ஒருவர் புகார் அளிக்கும் நடைமுறையில் உதவுவார். அதிகாரி ஒரு தனி அறையில் உங்களுடன் சிறிது நேரம் உரையாடுவார். உங்கள் அடையாளம் பாதுகாக்கப்படும்.

**2.** பாலியல் தாக்குதல் சம்பவங்களைக் கையாள, சிறப்புப் பயிற்சிபெற்ற விசாரணை அதிகாரி (IO) ஒருவரிடம் நீங்கள் அனுப்பப்படுவீர்கள். அந்த IO உங்கள் வாக்குமூலத்தைப் பதிவுசெய்வார். அந்த வாக்குமூலத்தில் உங்களுக்கு என்ன நடந்தது அல்லது நீங்கள் என்ன பார்த்தீர்கள் என்பதைப் பதிவுசெய்வார்.

**3.** உங்களுக்கு உணர்வுரீதியான ஆதரவு தேவைப்பட்டால், பாதிக்கப்பட்டவரை பராமரிக்கும் அதிகாரி ஒருவரின் உதவியைக் கோரலாம்.

**4.** தடயவியல் மருத்துவப் பரிசோதனை தேவைப்பட்டால், நீங்கள் OneSAFE நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படலாம்.

**5.** விசாரணைப் பற்றி IO உங்களுக்கு அவ்வப்போது தகவல் அளிப்பார்.

**நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது**

குற்றவாளி நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்படுவான். வழக்கை எதிர்த்து அவன் வழக்காடினால், நீதிமன்றத்தில் நீங்கள் சாட்சியமளிக்க நேரலாம். முடிந்தவரை உங்களுக்கு முழு ஆதரவு வழங்க, பல நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ⇒ உங்கள் அடையாளம் பாதுகாக்கப்படும்.
- ⇒ நீங்கள் அந்தரங்கமாக சாட்சியமளிப்பதை தேர்ந்தெடுக்கலாம்.
- ⇒ நீதிமன்றத்தில் ஒரு திரைமறைவுக்குப் பின்னால் இருந்து சாட்சியமளிக்க நீங்கள் அனுமதிக்கப்படலாம். அப்போது நீங்கள் குற்றவாளியை பார்க்கவேண்டியதில்லை.
- ⇒ நீதிமன்றத்திற்கு வெளியே ஒரு அறையில் வீடியோவழி சாட்சியமளிக்கவும் நீதிமன்றம் உங்களை அனுமதிக்கலாம்.
- ⇒ குற்றச்சாட்டிற்கு தொடர்பற்ற, குற்றவாளியைத் தவிர்த்து மற்றவர்களுடன் உங்களுக்கு உள்ள பாலியல் உறவு, நீதிமன்றம் அனுமதித்தால் அன்றி, கேட்கப்படாது.

*பாலியல் தாக்குதல் சம்பவங்களை பற்றி புகார் அளிப்பது குறித்த மேல் விவரங்களுக்கு, http://bit.ly/spf_victimsupport -ல் உள்ள வீடியோவையும் காணலாம்.*

## தடயவியல் மருத்துவப் பரிசோதனை

ஒரு மருத்துவரும், ஒரு தாதியும், காயங்கள் உள்ளதா என பரிசோதித்து, அவற்றை ஆவணப்படுத்த, தடயவியல் மருத்துவப் பரிசோதனை செய்வர். உங்கள் உடலில் இருந்து உடைகள், தலைமயிர், அந்தரங்க உறுப்புகளில் பதிந்துள்ள உயிரணுக்கள் முதலியவற்றையும், சேகரிப்பர். இவற்றை ஆதாரமாக போலிஸ் விசாரணையிலும், வழக்கு தொடரப்பட்டால் குற்றவாளிக்கு எதிராகவும், பயன்படுத்தலாம்.

ஆதாரங்கள் கலைக்கப்படாது இருக்க, கூடுமானவரை விரைவாக பரிசோதனை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். பரிசோதனைக்கு முன், மருத்துவர், தாதி மற்றும் IO, நடைமுறைப் பற்றி உங்களுக்கு விளக்குவர். நடைமுறைகளைப் பற்றி உங்களுக்கு கேள்விகள் ஏதும் இருந்தால், நீங்கள் அவர்களைக் கேட்கலாம்.

போலிஸ் கண்டோன்மெண்ட் காம்பிளக்ஸில் உள்ள 'ஒரே கூரையின்கீழ் துன்புறுத்தல் தடயவியல் பரிசோதனை' (OneSAFE) நிலையம், உங்களுக்கு வசதியையும், அந்தரங்கத்தையும் அளிக்கிறது. இங்கு நீங்கள் பாதிக்கப்பட்டவரை பராமரிக்கும் அதிகாரியிடமும், போலிசிடமும், பேசலாம். இந்த நிலையத்தில் தடயவியல் மருத்துவப் பரிசோதனையையும் செய்துகொள்ளலாம்.



OneSAFE தடயவியல் மருத்துவப் பரிசோதனை அறை